கொடைக்கானலில் கெடிகார தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 1090— திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் நகரில் கெடிகார தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் ஒரே பதிலில் இல்லை என்று கூறிவிட்டார்கள். கொடைக்கானல் சீதோஷ்ண நிலை தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்றதாக இருப்பதால், பெரியகுளம் தொகுதியில் எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லை என்ற குறையைப் போக்க, கொடைக்கானலிலே ஒரு கடிகார தொழிற்சாலை அமைப்பதற்கு மறு பரிசீலனையை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடிகாரத் தொழிற்சாலை ஒன்று துவக்குவதற்கான பரிசீலனை அரசிடம் இருக்கிறது. ஆனால், இடம் வேறு இடமாக இருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 2 மில்லியன் கடிகாரம் உற்பத்தி செய்கின்ற யூனிட் கொண்டதாக 6 கோடி ரூபாய் அளவில் டிட்கோ நிறுவனம், டாட்டா நிறுவனத்தைக் கூட்டுத்துறை முனைவராக சேர்த்துக்கொண்டு பிரான்சு, ஸ்விட்சர்லாந்து நாடுகளின் தொழில் நுட்ப உதவியோடு 6 கோடி மதிப்பீட்டில், 1000 பேர்களுக்கு வேலை கொடுக்கின்ற அளவில் ஒரு கைக்கடிகார தொழிற்சாலையைத் துவங்கயிருக்கிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஒசூரில் துவங்கயிருப்பதாகச் சொன்னார்கள். கொடைக்கானலில் இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஏதேனும் அந்தப் பகுதியில் ஆய்வு செய்யப்பட்டதா அல்லது பரிசீலனை செய்யப்பட்டதா? அதற்காக என்ன இடத்திலே என்று ஏதாவது சர்வே செய்யப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு பல இடங்களிலே நடைபெற்றிருக்கலாம். ஆனால், ஒசூரில் தான் அந்தத் தொழிற்சாலை நிறுவப்படும் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.